மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது பற்றிய சோதனைகள் எல்லாம் முடிந்து விட்டன. இதிலே என்ஜின்கள் ஓடுகின்றன என்பதையும் பார்த்தாகிவிட்டது. நமது வேளாண்மைத்துறையில் உள்ள தொழிற்சாலையில் ஐந்து எஞ்ஜின்கள் இருக்கின்றன. இதை உபயோகித்து அவற்றைக்கூட ஓட்டிப் பார்க்கலாம். ஆனால் இந்த எரி சாராயத்தை, வேளாண்மைத் துறையில் உள்ள பம்பு செட்டுக்களாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. காரணம் எரி சாராயம் ப்ளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகத் தேவைப்படுகின்றது. ஆகவே, பம்பு செட்டுக்களுக்கு டீசல் எண்ணெயையே உபயோகித்துக்கொண்டு, எரி சாராயத்தைத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 199 ஒத்திவைக்கப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் ஏற்பட்டுள்ள கலகம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "24—3—1975 இரவு முதல் 25—3—1975 மத்தியானம் வரையில் தொடர்ந்து சென்னையிலுள்ள சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் கலகம் ஏற்பட்டு சில வெளியார்களின் உதவியுடன் சில மாணவர்கள் உள்ளே சென்று பல மாணவர்களின் அறைகளிலுள்ள பூட்டுக்களையும் பெட்டிகளையும் உடைத்து சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் வரை பெறக்கூடிய சாமான்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு போய் விட்டார்கள். மாணவர்களிலும் சிலருக்கு இரத்த காயம் ஏற்பட்டு, சென்னை அரசாங்கப் பொது ஆஸ்பத்திரியிலும், வெளியிலும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்தும் சரியான நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் அதைப்பற்றி விவாதித்து மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டிய தன் அவசியத்தைக் குறித்து விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்"

என்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. கே. ராஜாராம் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதை அவர் சுருக்கமாக விளக்கிப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1975 மார்ச் 27]

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, 24-ம் தேதியன்று இரவு சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்கியுள்ள விடுதியில், மாணவர்களிடையிலே கோஷ்டிப் பூசல்கள், சண்டைகள் ஏற்பட்டு, அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் ஒரு பயங்கரமான நிலைமை உருவாயிற்று. அதன் பேரிலே போலீஸுக்கு டெலிபோன் செய்து பின்னர் ஓர் உதவிக் கமிஷனரும், சில போலீஸ் அதிகாரிகளும், மற்றும் போலீஸ்காரர்களும் அங்கே வந்திருக்கின்றார்கள். இவர்கள் வந்திருந்தபோதே இந்தக் கோஷ்டிச் சண்டையில் ஒரு கோஷ்டியினர் வெளியிலிருந்து மாணவர்கள் அல்லாத ஒரு சிலரை அழைத்து வந்து, தங்களுக்கு விரோதமாக உள்ள கோஷ்டியைச் சார்ந்த மாணவர்களை அடிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் கையில் கைக்குட்டைகளைக் கட்டிக் கொண்டு, தங்களை மட்டும் அடிக்காமல் கை குட்டை கட்டிக்கொள்ளாமல் யார் யார் இருந்தார்களோ அவர்களையெல்லாம் இஷ்டப்படி அடித்திருக்கின்றார்கள்.

மாணவர்களுக்குள் சண்டை சச்சரவு வருவதுபற்றி நாம் நிறைய அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. இன்று சண்டை போட்டுக்கொள்ளுவார்கள், நாளைக்குச் சேர்ந்துகொள்ளுவார்கள். அதைப் பெரிய காரியமாக எண்ணி நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவர வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் போலீஸ் அதிகாரிகள் வாசலில் இருக்கும்போதே மாணவர்கள் அல்லாதவர்கள் வெளியிலிருந்து வந்து, உள்ளே ஒரு கோஷ்டி மாணவர்களை அடித்ததோடு அவர்களுடைய அறைகளிலிருந்து ட்ரான்ஸிஸ்டர் ரேடியோக்கள், கைக்கெடியாரங்கள், விலை உயர்ந்த பேண்டுகள், ஷர்ட்டுகள் எல்லாவற்றையும், சுமார் 40 அல்லது 50 ஆயிரம் ரூபாய் பெருமான பொருள்களை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடந்தும்கூட, போலீஸ் உள்ளே வந்து இதைத் தடுக்கவில்லை. உள்ளே வர மறுத்துவிட்டார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால், பிள்ளைகள் கதி என்ன என்றுதான் பார்க்க வேண்டும். பி.ஏ. படித்துவிட்டு பி.எல். படிக்க வருகின்றார்கள் அந்தக் கல்லூரிக்கு. பெற்றோர்கள் வெளி ஊர்களிலே இருக்கின்றார்கள். அவர்கள் இதைப்பற்றித் தந்தி மூலம் அல்லது பத்திரிகைகள் மூலம் அறியும்போது அவர்களுடைய மனம் எப்படிப் பதைக்கும் என்று எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டு வருவது, உள்ளே இருப்பவர்களை அடிப்பது இப்படிப்பட்ட நிலைமையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால், மிகவும் ஆபத்தாக முடியும். இது இப்படியே போய்க்கொண்டிருந்தால், மாணவர்களுடைய சண்டை கல்லூரிகளுக்கு வெளியேயும் போய்விடக்கூடும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த முக்கிய பிரச்சினைமீதுதான் விவாதம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். சாதாரணமாக ஒத்திவைப்புப் பிரேரணை என்று கொண்டுவருவதில்லை. அவசியமானால் இதுபோன்ற விஷயங்களிலே கவன ஈர்ப்புத் தீர்மானம்தான் கொடுப்பது. தங்களுக்கு முன்பு திரு மாணிக்கவேலர் அவைத் தலைவராக இருந்த நேரத்தில் சட்ட சபை அங்கத்தினர் ஒருவர் அடிக்கப்பட்டுவிட்டார் என்று அப்போது ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக்கொண்டு வந்தோம். அப்போது இருந்த தலைவரும் அதை ஒப்புக்கொண்டு, ஒரு மணிநேரம்

விவாதத்தை அனுமதித்தார். அதை விவாதித்துப் பேசிய நேரத்தில் எல்லாக் கட்சியினரும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வசதி ஏற்பட்டது. அந்த மாதிரி சபை முடிந்தபிறகு ஒரு மணிநேரம் இதை விவாதிப்பதற்கு அனுமதித்தால், இங்கே நடக்கும் விவாதத்தின்மூலம் வேறு கல்லூரி களில், சென்னையில் மட்டுமில்லை, வேறு எந்த ஊரிலும் இந்தமாதிரி தகராறு ஏற்படாமல் இருப்பதற்கான ஆலோசனைகளை, கருத்துக்களைத் தருவதற்கு உதவியாக இருக்கும் என்ற ஒரே காரணத்தினுல் இந்த மாதிரிக் கொண்டுவந்திருக்கின்றேன். இதை அனுமதித்தால், அது அர சாங்கத்திற்கும் நல்லது, நமக்கும் நல்லது, நாட்டு மக்களுக்கும் நல்லது. எனவே இதை அரசாங்கம் அனுமதிக்கும் என்ற நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சட்டக்கல்லூரி மாணவர்கள் விடுதியில் ஏற்பட்ட கலவரம் பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதுபற்றித் தம் கருத்துக்களைக் கூறியிருக்கின்றுர்கள். வருந்தத் தக்கதொரு நிகழ்ச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் நடைபெற் றிருக்கின்றது. அங்கே மாணவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் அளவிற்கு மனமாச்சரியம் ஏற் பட்டிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்ருகும். வேறு பல சமயங் களில் கட்சி மாச்சரியங்கள் ஏற்படுவது உண்டு. ஆனல் இதில் கட்சி மாச்சரியம் இல்லாமல் வேறு வகையில் மாணவர்கள் இரண்டு பிரிவு களாகப் பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த மாணவர்கள் விடுதியில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், பணியாளர்கள் இரண்டொரு மாணவர்களால் அடிக் கப்பட்டார்கள் என்ற காரணத்தினுல், தாக்கப்பட்ட பணியாளர்கள் இரண்டு பேரும் அந்த விடுதி உதவிக் காப்பாளரிடம் வந்து புகார் மனு ஒன்றைக் கொடுத்தார்கள். அதன் பேரில் 23—3—1975 அன்று காலை உதவிக் காப்பாளர் அவர்கள் விசாரணை ஒன்றை ஏற்பாடு செய்து, அந்தப் பணி யாளர்களையும் மாணவர்கள் இருவரையும் விசாரித்தார். அந்த நேரத் தில் இரண்டு மாணவர்கள் மீது, லிங்கப்பா, முருகேசன் என்ற இரண்டு மாணவர்கள் மீது, புகார் மனுவைக் கொடுத்திருந்தார்கள். இதை விசாரித்துக்கொண்டிருந்தபோது அந்த மாணவர்கள் இதை மிகவும் ஆட்சேபித்தார்கள் என்பது மட்டுமல்லாமல், முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். முரட்டுத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பது மட்டுமல்லா மல், அவரது கை உதவிக் காப்பாளர் முகத்தில் பட்டதாக மாணவர்கள் கூறுகின்றுர்கள். வேண்டுமென்றே உதவிக் காப்பாளர் முகத்தில் அடித்த தாக மாணவர்கள் சிலர் கூறுகின்றுர்கள். "தாம் கை நீட்டிப் பேசிய போது அவரது முகத்தில் தமது கை பட்டுவிட்டது" என்று அவர் கூறுகின்றுர். ஆனுலும்கூட அந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடாது, இந்த மாணவர்கள் இதற்காக உதவிக் காப்பாளரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர்கள் சொல்லி, முதலில் மறுத்த அந்த

மாணவர் பிறகு "என் கை அப்படிப்பட்டிருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார். பிறகு நடந்தவற்றைப்பற்றிஉதவிக் காப்பாளர் கல்லூரி முதல்வர் அவர்களிடம் எழுதிக்கொடுத்திருக்கின்றார். அதே நேரத்தில் வேறு ஒரு பிரிவைச் சார்ந்த மாணவர்கள், இந்த உதவிக் காப்பாளரை அடித்த மாணவருக்கு எதிராக இருப்பவர்கள் இந்த மாணவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவரை "சஸ்பெண்டு" செய்ய வேண்டும் என்று முதல்வர் அவர்களிடம் சொல்லி யிருக்கின்றார்கள்.

(பிற்பகல் 4-20)

மற்றொரு குழுவினர் அவர் ஏற்கெனவே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விட்டார், ஆகவே அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது, விட்டுவிட வேண்டும் என்று முதல்வரிடத்திலே சொல்லியிருக்கின்றார்கள். முதல் வர் அவர்களும், கல்லூரிப்பேராசிரியர்களும் என்ன செய்வது என்று கலந்து பேசி, இப்படி வார்டிலேயே அடிக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்ட தன் காரணமாக விசாரணை நடத்தி அதற்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றார்கள். பிறகு இந்த உதவிக் காப்பாளர் கல்லூரியை விட்டு 24-ம் தேதி காலை வெளியே வருகின்ற போது 50 பேர் சூழ்ந்துகொண்டு, "நீங்கள் அறிக்கை கொடுத்ததன் பேரிலேதானே அவர்கள் நடவடிக்கை எடுக்கின்றார்கள். ஆகவே நீங் கள் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தியிருக்கின்றார் கள். இதற்குள்ளாக ஒரு செய்தி பரவிவிட்டது. அங்கே உதவிக் காப்பாளருக்கு எதுவும் நடக்கவில்லை, அப்படி இருக்கும்போதே அவர்கள் உதவிக் காப்பாளரை அடித்துவிட்டார்கள் என்ற வதந்தி பரவி, அடித்து விட்டார்களே என்று ஒரு இடத்திலிருந்து ஒரு சாரார் கிளம்பி, வெளியே போனவர் திரும்பி வந்தால் வருகிற தாக்குதல்களை உள்ளே இருப்பவர் கள் சமாளிப்பதற்கு ஆயத்தமாக இருக்க, இப்படிப்பட்ட பதட்ட நிலை ஏற்பட்டிருந்தது. இதைக் கண்ட கூடுதல் உதவிக் காப்பாளர் அவர்கள் காவல் துறையினருக்கு செய்தி அனுப்பியிருக்கின்றார்கள். காவல் துறை யினர் 7½ மணிக்கு வெளியிலே பாதுகாப்புக்காக இருந்துகொண்டிருந் தார்கள். அதற்கு நீண்ட நேரத்திற்குப் பிறகு, வெளியிலிருப்பவர்களை உள்ளே நுழையவிடாமல் தடுக்க இவர்கள் பலாத்காரமாக உள்ளே போக, இரண்டு சாராருக்கும் இடையிலே கை கலப்பு ஏற்பட்டு, காயங்கள் ஏற்படுகின்ற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அங்கு இருந்த எல்லா மாணவர்களும் கூடுதல் உதவிக் காப்பாளர் அவர்களும் அவற் றைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுத்திருக்கின்றார்கள். அந்த நேரத்தில்தான் பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டு ஜன்னல்கள், கதவுகள், கட்டில்கள், பீரோக்கள் இன்னும் மற்ற பொருள்கள் சேதப்பட்டன. இரண்டு தரப்பிலேயும் மாணவர்கள் அடிபடுகின்ற நிலைமைக்கு ஆளாகி 18 பேருக்கு மேல் வெளியிருப்பு நோயாளிகளாகவும், உள்ளிருப்பு நோயாளிகளாகிற அளவுக்கு ஒரு சிலர் கீழ்ப்பாக்கம் பெரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். இந்த நிலையில் அங்கே பாதுகாப்பாக இருக்க முடியாது என்று பல மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேற முயன் றார்கள். அவர்களுக்கு அனுமதி அளித்து, மீதம் பேருக்கும் அனுமதி அளித்து அந்த விடுதியிலே பதட்ட நிலைமை இருப்பதன் காரணமாக

அத்தனை பேருக்கும் விடுமுறை கொடுத்து, "கால வரையறை இன்றி விடுதி மூடப்படுகிறது" என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு கல்லூரியைத் திறந்தால் அங்கேயும் பதட்ட நிலைமை ஏற்படும் என்ற காரணமாக நேற்றைக்கு முன்னாள் விடுமுறை விடப்பட்டிருப்பதன் காரணமாகவும் நாளை, நாளைக்கு மறு நாளைக்கு மறுநாள் விடுமுறை இருப்பதன் காரணமாகவும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, 31-ம் தேதி அன்று கல்லூரி திறந்தால் போதும் என்று முடிவெடுத்திருக்கின்றார்கள். இருசாராருக்கும் இப்படிப்பட்ட நிலைமைகளிலே கை கலப்பு வருகின்றபோது, அங்கே போலீசார் இருந்தாலும்கூட, முதல்வர் அவர்கள் அழைத்தாலொழிய போலீசார் உள்ளே போகக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. போகின்றபோதெல்லாம் அத்து மீறி உள்ளே நுழையக்கூடாது என்பதனால் வாய்ச் சொல் மூலமாக அல்லது எழுத்தின் மூலமாக அவர்கள் அழைக்காததன் காரணமாக உள்ளே போலீசார் போகக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. அந்தச் சமயத்தில் காப்பாளர், சக மாணவர்கள் சொல்லிக் கேட்காதவர்களை போலீசார் போய் சமாதானப்படுத்துகின்ற சூழ்நிலை வராது. அப்படிப் போனாலும், அங்கே போய் ஒன்று கைது செய்ய வேண்டி வரும் அல்லது இவர்களோடு அவர்களுக்குக் கைகலப்பு ஏற்படும். வேறு பல விளைவுகள் ஏற்படும் என்று காப்பாளர்கள் பல விடுதிகளில் அனுபவம் பெற்றிருப்பதன் காரணமாக, உள்ளே அழைக்காது வைத்திருக்கின்றார்கள். இந்த அளவுக்குத்தான் செய்தி நமக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கின்றபோது, கல்லூரித் தலைவரோ விடுதிக் காப்பாளரோ போலீசாரோ கொடுத்த குறிப்புகளில் மாணவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து வெளியே சென்ற மாணவர்கள் தாக்கினார்கள் என்று இருக்கிறது. வெளியிலிருந்து ஆட்கள் வந்து தாக்கினார்கள் என்று குறிப்பில் இல்லை. மருத்துவமனையிலிருந்த மாணவர்கள் கொடுத்திருக்கின்ற வாக்குமூலத்தில் வெளியார் சிலரும் கலந்திருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் நேற்று கொடுத்திருக்கின்ற ரிப்போர்ட்டிலே அம்மாதிரி வெளியார்கள் வந்து தாக்கினார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற நிலைமையிலே போலீசார் முழுவதையும் விசாரணை செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கின்றோம். போலீசார் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து, பாதுகாப்பை வலிவுப்படுத்தியிருப்பதோடு, கிரிமினல் வழக்கு 860/75, பிரிவுகள் 137, 138, 337, 426 பீனல் கோட் சட்டத்தின்கீழ் பதிவு செய்து அதற்கான புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்த சேதாரங்கள் எவ்வளவு என்று ஆராயும்படி கேட்டிருக்கின்றோம். நம்முடைய ஜன்னல்கள், கதவுகள் உடைந்ததால் ஏற்பட்டிருக்கின்ற சேதாரங்களைத்தான் நாம் அறுதியிட்டு அந்த அளவுக்குக் கூற முடிந்தது. எவ்வளவு சேதாரம் இந்த வகையில் என்று கேட்டபோது ரூ. 5 ஆயிரம் அளவுக்குச் சேதம் இருக்கும் என்று சொன்னார்கள். கட்டில்கள் மற்ற பொருள்கள் சேர்த்து ரூ. 8 ஆயிரம். ஆக மொத்தம் ரூ. 13 ஆயிரம் அளவுக்கு சேதமாயிருக்கக்கூடும் என்று சொல்கின்றார்கள். ஆனால் உள்ளே இருக்கின்ற பொருள்களைக் களவாடியிருந்தால், அதுபற்றி புலன் விசாரணை மூலம் தான் முழு அளவுக்குத் தெரியும். அந்தக் கருத்தை நாம் விட்டு விடாமல், இந்த அறிக்கைகளில் அது வரவில்லை என்றாலும்கூட மாணாக்கர்

கள் சொல்லியிருக்கும் புகார்கள் மீதும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டிருப்பதனாலும், நாம் காவல்துறையினருக்கு அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றோம். வெளியார் யாராவது தலையிட்டிருப்பார்களானால், அவர்களைக் கட்டாயமாகத் தண்டித்தால்தான், வேறு பல விடுதிகளிலே இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கும். சரியாகவோ தவறாகவோ பல விடுதிகளிலே, கல்லூரிகளிலே மாணவர்கள் பிரிந்து பிரிந்து மனமாச்சரியங்களை, சச்சரவுகளை வளர்ப்பது எல்லோருக்கும் வருத்தத்தை தரக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது. இதிலே கண்காணிப்பாக இருக்க வேண்டும் என்ற முறையிலே தான் கட்டளையிட்டிருக்கின்றோம். அந்தப் புலன் விசாரணை நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களும் காவல் துறை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். ஏனென்றால், ஒரு விடுதியிலே ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் வேறு பல நிலைமைகளுக்கு இடம் தருமானால், அதன் மூலம் மாநிலத்தினுடைய அமைதியும் கெடும் என்ற காரணமாக, அதைக் கட்டாயம் கவனிக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றார்கள். இந்த விவரங்கள் எல்லாம் வந்தபிறகு தக்க நடவடிக்கைகள் இதன்மீது எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த வாய்ப்பிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேறு மாணவர்கள் கொடுத்திருக்கின்ற புகார்மீதும் புலன் விசாரணை சேர்த்து எடுப்பது என்ற அளவில், அங்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதைத் தவிர முதல்வர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் இந்த 2, 3 நாட்களுக்குள்ளாக ஒரு சமரச முடிவினுடைய அடிப்படையிலே 31ம் தேதி கல்லூரியினைத் திறப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இதை விழிப்புணர்ச்சியோடு கண்காணிக்க கல்வித் துறையும், காவல்துறையும் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும். இதில் சட்டத்துறையும் ஈடுபட்டிருப்பதன் காரணமாக மேற்கொண்டு விவாதிப்பதற்கு அவசியமில்லை என்று கூறி, தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதனையும் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இதிலே கொஞ்சம் துரிதமாக புலன் விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புலன் விசாரணை பட்சபாதமற்ற முறையில் நடக்கும்படியான அளவில், ஒரு நியாயாதிபதியை அல்லது போலீஸ் இலாகாவாக இருந்தால் டி.ஐ.ஜி. கிரேடில் உயர்தர போலீஸ் அதிகாரியைப் போட்டு விசாரணை செய்ய வேண்டும். நியாயாதிபதியை வைத்து விசாரணை செய்தால் மிகவும் நலமாக இருக்கும். முந்தாநாள் இது நடந்தது. இன்றைய தினம் சிதம்பரத்தில் பையன்களுக்குள்ளே இதுமாதிரி கல்வரம் இருப்பதாக சிறிதுமுன் தகவல் வந்திருக்கின்றது. இது பரவிக் கொண்டே போகாமல் இருக்க வேண்டுமென்று நான் மிகவும் விரும்புகிறேன். ஆகவே துரிதமாக விசாரணை நடக்கவேண்டும். இதில் நீதிபதி விசாரணை நடத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதற்கு நீதிபதி விசாரணை தேவையில்லை என்பதே அரசின் கருத்து. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறியதுபோல, காவல் துறையில் பெரிய அதிகாரிகளில் ஒருவரை வைத்து, அதைப்பற்றி விசாரணை செய்வதில் ஆட்சேபணை எதுவும் கிடையாது. இது பரவுவதாகச் சொன்னார்கள். இந்த மாணவர்கள் இரண்டாகப் பிரிந்து ஒருவரையொருவர் தாக்குகின்ற நேரத்தில், இதிலே வகுப்பு அடிப்படை, சாதி அடிப்படை என்ற அளவுக்கு வந்து சேர்ந்து விடுகிறது. இப்படிப்பட்ட சாதி அடிப்படைகள் எல்லாம் வராத அளவுக்கு அந்தந்த சமுயாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இவ்வொத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என் இசைவை மறுக்கிறேன்.

3. அரசின் தீர்மானம்.

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்புகள் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்புகள் * பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கேட்டுக் கொள்கின்றேன். அந்தக் கொள்கைக் குறிப்புகளை நான் இங்கே படித்து அறிவித்ததாக அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்:—

"சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* THIRU S. NARAYANASWAMY : **Hon. Chairman**, I am grateful for this opportunity to speak on the Policy Note on Public Health and on Medical Services during 1975–76. Incidentally, the Performance Budget in regard to both these has just been circulated to us, not only to-day, but only just now. I had no time to study them in detail. It is not by way of a criticism about the delayed delivery of the Policy Notes or the Performance Budgets; but we are under some handicap in perusing them.

* ~~88—269~~ ஆம் பக்கங்களில் இணைப்பு II -ஆக அச்சிடப்பட்டுள்ளது.
374-555